**IA 153/2025 in OS 73/2015 dt.11.07.2025**
On the file of the DM Cum JM, Natham

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

முன்னிலை :-திருமதி.ஜா.ஆ.ஃப்ரீன் பேகம், எம்.காம்., எல்.எல்.எம்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்

2025 ம் ஆண்டு ஜீலை திங்கள் 11 ம் நாள் வெள்ளிக்கிழமை

இடைநிலை மனு எண்.153/2025

உள்

அசல் வழக்கு எண்.73/2015

வேலாயுதம் ... மனுதாரர்/1 ம் பிரதிவாதி

... எதிர் ...

அறிவழகன் ... 1 ம் எதிர்மனுதாரர்/வாதி

2. மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல்
3. கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, திண்டுக்கல்
4. வட்டாட்சியர், நத்தம்
5. செயல் அலுவலர், நத்தம் ... 2, 3, 4, 5 எதிர்மனுதாரர்கள்/ 2, 3, 4, 5 பிரதிவாதிகள்

இந்த மனுவானது 28.04.2025 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 11.07.2025 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் / 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ஜேம்ஸ் ஜான் பிரிட்டோ, அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பாலகிருஷ்ணன், அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.P.கிருஷ்ணமூர்த்தி, அவர்கள் முன்னிலையாகியும், 5 ம்

எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ஜஹாங்கீர், அவர்கள் முன்னிலையாகியும், மனு மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்டு இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்.

<u>உத்தரவு</u>

1) இம்மனுவானது, மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி அசல் வழக்கில் 4ம் பிரதிவாதியை சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய வழக்கினை Re-open செய்ய அனுமதி வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 151ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2) மனுவின் சுருக்கம்:</u>

இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதியாவார். இம்மனுவில் அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம், செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சியம் 30.10.2024 ம் முடிக்கப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பு சாட்சியம் கடந்த 09.04.2025 ம் தேதியும், 2 முதல் 5 பிரதிவாதிகளின் சாட்சியம் கடந்த 21.04.2025 ம் தேதியும் முடித்து வைக்கப்பட்டு தற்போது Argument செய்ய வேண்டி வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை தாக்கல் செய்யாமல் சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளதால், தனது தரப்பில் அவர்களை குறுக்கு விசாரணை செய்ய தனக்கு வாய்ப்பு கிடைக்காமல் போய்விட்டதாகவும், இந்த அசல் வழக்கில் 4ம் பிரதிவாதியான வட்டாட்சியர், நத்தம் அவர்களை இவ்வழக்கு தொடர்பாக

ஆவணங்களை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்து அவரை ஒரு சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது தனது தரப்பு வாதத்தை நிரூபணம் செய்வதற்கு அவசியமும், நியாயமும் ஆகும். மேற்படி, அசல் வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட நத்தம் பட்டா எண்கள்: 302, 822, 897, 898 மற்றும் 2ம் சாட்சியால் தாக்கல் செய்யப்பட்ட நத்தம் பட்டா எண்கள்:303 மற்றும் 704, மேற்படி நத்தம் பட்டா தொடர்புடைய அனைத்து ஆவணங்கள் மற்றும் சர்வே எண்.212/15 மற்றும் சர்வே எண்.212/12 புல வரைபடங்கள் ஆகிய ஆவணங்களை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்து அந்த ஆவணங்களை வைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டிய அவசியம் உள்ளதால், மேற்படி 4ம் பிரதிவாதியை சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய வேண்டி வழக்கினை Re-open செய்ய உத்தரவிட வேண்டி மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பு எதிருரை சுருக்கம்</u> :**

1ம் எதிர்மனுதாரர்/ வாதி தனது எதிருரையில், மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கானது Argument நிலையில் உள்ளபோது, 3ம் பிரதிவாதியை சாட்சியாக குறுக்கு விசாரணை செய்யவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும், மனுதாரர் தரப்பில் இவ்வழக்கில் வழக்கெழுவினா வனையப்பட்டு 15 தினங்களுக்குள் இம்மனுவில் குறிப்பிடப்பட்ட சாட்சியான நத்தம் வட்டாட்சியரை விசாரணை செய்ய வேண்டும் என எந்த பட்டியலும் கொடுக்காத நிலையில் Order 16 Rule 1ன் பிரகாரம் சாட்சியை விசாரிக்க மனு தாக்கல் செய்ய இயலாது. வழக்கின் தரப்பினர்கள் (வாதி, பிரதிவாதி)அவர்களது வழக்கை

அவரவர்களே நிரூபிக்க வேண்டும். இவ்வழக்கின் பிரதிவாதி தனது வழக்கை நிரூபிக்க தகுந்த ஆவணங்களையும், சாட்சிகளையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியது பிரதிவாதியின் கடமையாகும். மேற்படி, அசல் வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட நத்தம் பட்டா எண்கள்: 302, 822, 897, 898 மற்றும் 2 ம் சாட்சியால் தாக்கல் செய்யப்பட்ட நத்தம் பட்டா எண்கள்:303 மற்றும் 704, மேற்படி நத்தம் பட்டா தொடர்புடைய அனைத்து ஆவணங்கள் மற்றும் சர்வே எண்.212/15 மற்றும் சர்வே எண்.212/12 புல வரைபடங்கள் ஆகிய ஆவணங்களை நத்தம் வட்டாட்சியரை நீதிமன்றத்திற்கு கொண்டு வரச்சொல்லி, அவரை குறுக்கு விசாரணை செய்து மனுதாரர் தரப்பு வாதத்தை நிரூபணம் செய்யவேண்டும் என்பது சட்டப்படி தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். மேலும், மனுதாரரான 1ம் பிரதிவாதி பத்திரம் தொடர்பாகவும், பட்டா தொடர்பாகவும் சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் W.P.(M.D) No. 21762/2023 என வழக்கு தொடரப்பட்டு அதன் அடிப்படையில் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் ந.க.எண்.9982/2023/ஆ 4 நாள்.28.03.2024 என உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மேற்படி உத்தரவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த உத்தரவிலும் மனுதாரரான 1ம் பிரதிவாதி எந்தவித மேல்முறையீடும் செய்யவில்லை. எனவே இந்த அசல் வழக்கை பொருத்தமட்டில் வழக்கிற்கு தேவையான அனைத்து ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்கை பொறுத்தமட்டில் நத்தம் வட்டாட்சியர் தாக்கல் செய்ய வேண்டிய ஆவணங்கள் எதுவும் இல்லை. அவர் சாட்சியம் அளிக்க தேவையும் இல்லை. எனவே, அசல் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற செட்ட எண்ணத்திலும், வாதியை வீண் அலைகழிப்பு செய்யவேண்டுமென்ற நோக்கத்துடனும், வாதிக்கு மனஉளைச்சலை ஏற்படுத்தும்

பொருட்டும் Argument நிலையில் இருந்து Re-open செய்ய தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) **3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு எதிருரை (2, 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்)**

மனுதாரருக்கு தாவா வழக்கு எதிராக இருப்பதால் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தில் 3ம் எதிர்மனுதாரரை சாட்சியாக விசாரணை செய்ய கோரி மனு தாக்கல் செய்துள்ளது ஆட்சேபிக்கப்படுகிறது என்றும், மனுதாரர் கோரியுள்ள ஆவணங்கள் அனைத்தும் இணையத்தில் ஏற்றப்பட்டுள்ளதால் இணைய வழியாக பெற்றுக் கொள்ளலாம் என்றும், மேற்படி ஆவணங்களை 3ம் எதிர்மனுதாரர் கொண்டு வந்து சாட்சியம் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், அதனால் மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5) இருதரப்பிலும் சாட்சிய, சான்றாவணங்கள் தாக்கல் இல்லை. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட் மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது.

6) இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்? மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

7) <u>தீர்வு</u>

7.1) மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் அசல் வழக்கான தற்போது வாதுரைக்காக நிலுவையில் உள்ளது என்றும், 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை தாக்கல் செய்யாமல் சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளதால், 1ம் பிரதிவாதி தரப்பில் அவர்களை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு கிடைக்காமல் போய்விட்டதாகவும், இந்த அசல் வழக்கில் 4ம் பிரதிவாதியான வட்டாட்சியர், நத்தம் அவர்களை இவ்வழக்கு தொடர்பாக ஆவணங்களை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்து அவரை ஒரு சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது தனது தரப்பு வாதத்தை நிரூபணம் செய்வதற்கு அவசியமும், நியாயமும் ஆக உள்ளது என்றும் எனவே தாவா மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று வாதிட்டார்.

7.2) மாறாக 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் அசல் வழக்கை பொருத்தமட்டில் வழக்கிற்கு தேவையான அனைத்து ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கை பொறுத்தமட்டில் நத்தம் வட்டாட்சியர் தாக்கல் செய்ய வேண்டிய ஆவணங்கள் எதுவும் இல்லை என்றும், அவர் சாட்சியம் அளிக்க தேவையும் இல்லை என்றும், பிரதிவாதி தான் தனது தரப்பை நிரூபணம் செய்ய வேண்டுமென்றும், வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் தொடர்பாக மீண்டும் நத்தம் வட்டாட்சியரை மறுபடியும் மேற்படி ஆவணங்களை கொண்டுவரச்சொல்வதும், அவரை குறுக்கு விசாரணை செய்து 1ம் பிரதிவாதி தரப்பு வாதத்தை நிரூபணம் செய்ய கோரியுள்ளது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும், மேலும் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, அறிக்கை மற்றும் வரைபடம்

தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரரான 1ம் பிரதிவாதி பத்திரம் தொடர்பாகவும், பட்டா தொடர்பாகவும் சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் W.P.(M.D) No. 21762/2023 என வழக்கு தொடரப்பட்டு அதன் அடிப்படையில் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் ந.க.எண்.9982/2023/ஆ 4 நாள்.28.03.2024 என உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மேற்படி உத்தரவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த உத்தரவிலும் மனுதாரரான 1ம் பிரதிவாதி எந்தவித மேல்முறையீடும் செய்யவில்லை என்றும் எனவே, அசல் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் எடுத்துரைத்தார். 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் கோரியுள்ள ஆவணங்கள் அனைத்தும் இணையத்தில் ஏற்றப்பட்டுள்ளதால் இணைய வழியாக பெற்றுக் கொள்ளலாம் என்றும், மேற்படி ஆவணங்களை 3ம் எதிர்மனுதாரர் கொண்டு வந்து சாட்சியம் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், அதனால் மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் வாதிட்டார்.

7.3) இந்நீதிமன்றம் ஆனது அசல் வழக்கு கோப்பை பார்வையிட்டதில், தாவா 1வது லக்கச் சொத்தான வாதி தனக்கு பாத்தியப்பட்ட வீட்டிற்கு சென்றுவர பயன்படுத்தும் நத்தம் சர்வே எண். 531/34, 531/35, 531/36 ஆகிய நம்பர்களுக்கு கட்டுப்பட்ட வாதிக்கும் அவரது உறவினர்களுக்கு மட்டும் பாத்தியப்பட்ட பொதுப்பாதையின் வழியாக நடந்து மதுரை to நத்தம் மெயின்ரோட்டிற்கு சென்றுவர வாதி உரிமை உள்ளவர் என்று விளப்புகை பரிகாரம் கோரியும், மேற்படி இடையீட்டு மனு எண். I.A.No.335/2016-ல் கனம் நீதிம உத்தரவின்பிரகாரம் நீதிமன்ற ஆணையளாரால் சமர்ப்பிக்கப்பட்ட வரைபடத்தில்

கண்டுள்ளவாறு 1ம் பிரதிவாதியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பகுதியினை 1ம் பிரதிவாதியே தனது சொந்தச் செலவில் இடித்து அப்புறப்படுத்த வேண்டுமென பிரதிவாதிக்கு செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிட கோரியும், ( Amended as per order in I.A.No: 226/2022, dated 23-1-2023) உத்தேச வரைபடத்தில் 2 லக்க சொத்தான ஏ.பி.சி.டி பகுதியில் தென்வடல் 38 அடியும், கிழமேல் தென்புறம் 10 அடியும், கிழமேல் வடபுறம் 13 அடியிலும் 1ம் எதிர்வாதி செய்துள்ள ஆக்கிரமிப்பை 2 முதல் 5 எதிர்வாதிகள் அகற்ற வேண்டும் என்று செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கின் செலவுத்தொகை கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது அசல் வழக்கானது இரு தரப்பிலும் சாட்சிய சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு, முடிக்கப்பட்டு, வாதுரைக்காக நிலுவையில் உள்ளது.

7.4) மனுதாரர் தரப்பில் 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை தாக்கல் செய்யாமல் சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளதால், தனது தரப்பில் அவர்களை குறுக்கு விசாரணை செய்ய தனக்கு வாய்ப்பு கிடைக்காமல் போய்விட்டதாகவும், இந்த அசல் வழக்கில் 4ம் பிரதிவாதியான வட்டாட்சியர், நத்தம் அவர்களை இவ்வழக்கு தொடர்பாக ஆவணங்களை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்து அவரை ஒரு சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது தனது தரப்பு வாதத்தை நிரூபணம் செய்வதற்கு அவசியமும், நியாயமும் ஆகும். மேற்படி, அசல் வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட நத்தம் பட்டா எண்கள்: 302, 822, 897, 898 மற்றும் 2ம் சாட்சியால் தாக்கல் செய்யப்பட்ட நத்தம் பட்டா எண்கள்:303 மற்றும் 704, மேற்படி நத்தம் பட்டா தொடர்புடைய அனைத்து ஆவணங்கள் மற்றும் சர்வே எண்.212/15 மற்றும் சர்வே எண்.212/12 புல வரைபடங்கள் ஆகிய

ஆவணங்களை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்து அந்த ஆவணங்களை வைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டிய அவசியம் உள்ளதால், மேற்படி 4 ம் பிரதிவாதியை சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய வேண்டி வழக்கினை Re-open செய்ய கோரப்பட்டுள்ளது. மேலும் வாதங்களின் போது பாதைக்காக கோரப்பட்டுள்ள இடமானது தனது பட்டா நிலத்திலிருந்த விஸ்தீரணம் குறைக்கப்பட்டு, நத்தம் பட்டாவாக வழங்கப்பட்டுள்ளது என்றும் அது குறித்து தெளிவுபடுத்த வழக்கை ரீஓபன் செய்ய வேண்டியது அவசியம் என்று வாதிட்டார்.

7.5) மேலும் அதற்கு ஆதரவாக, K.K.Velusamy Vs. N.Palanisamy Civil Appeal Nos.2795-2796 of 2011 என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்ற முன்தீர்ப்புரையில் " Where the application is found to be bonafide and where the additional evidence, oral or documentary, will assist the court to clarify the evidence on the issues and will assist in rendering justice, and the court is satisfied that non-production earlier was for valid and sufficient reasons, the court may exercise its discretion to recall the witnesses or permit the fresh evidence.

In this case, we are satisfied that in the interests of justice and to prevent abuse of the process of court, the trial court ought to have considered whether it was necessary to re open the evidence and if so, in what manner and to what extent further evidence should be permitted in exercise of its power under section 151 of the Code" என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி வாதங்களை முன்வைத்தார். மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முன்தீர்ப்புரை ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே உள்ளது.

7.6) மாறாக எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் Pothalapala Hari Krishna Vs. G.Krishnamurthy என்ற வழக்கில் In The High Court of Andhra Pradesh At Amaravati நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புரையை மேற்கோள் காட்டி வாதிட்டார். அதில் "It must also be noted that these applications have been filed after completion of the evidence on both sides. This Court in Batchu Jagadeesh Kumar vs. Mugili Venka Swamy had held that reopening of evidence at the stage of arguments could only be allowed in exceptional and rare cases Such applications can be allowed only where it is demonstrated that the party seeking such reopening was unable to produce evidence or produce witnesses despite due diligence and that facts which were not known earlier had come to light subsequently in the present case, no such circumstances are available.

For all the aforesaid reasons, this Court does not find any reason to interfere with the orders of the trial Court and these two civil revision petitions are accordingly dismissed" என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வாதுரைக்காக உள்ள வழக்கை அவசிய காரணம் மற்றும் அரிதான வழக்குகளில் மட்டுமே ரீஓபன் செய்யலாம் என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

7.7) அசல் வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டுள்ள நிலையில், 1ம் பிரதிவாதி தரப்பில் 2 முதல் 5 பிரதிவாதிகள் அரசு அலுவலரை விசாரணை செய்ய கோரப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் பட்டா இடமானது நத்தம் இடமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது குறித்து தெளிவுபடுத்த வேண்டியுள்ளதாகவும் அதனால் மேற்படி சாட்சியை விசாரணை செய்ய வேண்டியதுள்ளது என்றும்

எடுத்துரைக்கப்பட்டுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே உள்ளது. அசல் வழக்கில் கோரப்பட்டுள்ள பரிகாரத்தை கவனத்தில் கொண்டும், மேற்படி சாட்சியை விசாரணை செய்யும் பட்சத்தில் இந்நீதிமன்றத்திற்கு அசல் வழக்கை அறுதியாக தீர்மானிக்க உதவியாக இருக்கும் என்ற மனுதாரர் தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே உள்ளது. இந்நீதிமன்றமானது விசாரணை நீதிமன்றமாக இருப்பதாலும், வழக்கு தரப்பினர்களுக்கு தங்கள் தரப்பை நிரூபணம் செய்ய போதிய வாய்ப்புக்கள் வழங்க வேண்டும் என்பதாலும், மனு காலதாமதம் செய்யாமல் உடனடியாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், தரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனைகளை அறுதியாக தீர்மானிக்கவும், மென்மேலும் தரப்பினர்களுக்கிடையே வழக்குகள் ஏற்படுவதை தடுக்கவும் நீதியின் நலன்கருதி இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ம் ஆண்டு ஜீலை திங்கள் 11 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J.Aafreen Begum
Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.07.11 00:27:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

நத்தம்.

இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-இல்லை.

J.Aafreen Begum
Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.07.11 00:27:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

நத்தம்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

முன்னிலை :-திருமதி.ஜா.ஆ.ஃப்ரீன் பேகம், எம்.காம்., எல்.எல்.எம்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்

2025 ம் ஆண்டு ஜீலை திங்கள் 11 ம் நாள் வெள்ளிக்கிழமை

இடைநிலை மனு எண்.153/2025

உள்

அசல் வழக்கு எண்.73/2015

வேலாயுதம், த/பெ.ரத்தினம், இந்து, வயது சுமார் 71, க.எண்.229A, மதுரை மெயின் ரோடு, நத்தம் கோவில்பட்டி, நத்தம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

... மனுதாரர்/1 ம் பிரதிவாதி

... எதிர் ...

அறிவழகன், த/பெ.லேட்.ந.சுப்பிரமணியன், இந்து, வயது சுமார் 56, மதுரை மெயின் ரோடு, நத்தம் கோவில்பட்டி, நத்தம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

... 1 ம் எதிர்மனுதாரர்/வாதி

1. மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலுநாச்சியார் வளாகம், திண்டுக்கல் டவுன், திண்டுக்கல் மாவட்டம்.
2. கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, திண்டுக்கல் டவுன், திண்டுக்கல் மாவட்டம்.
3. வட்டாட்சியர், நத்தம் வட்டாட்சியர் அலுவலகம், நத்தம் டவுன், நத்தம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.
4. செயல் அலுவலர், நத்தம் பேரூராட்சி அலுவலகம், நத்தம் டவுன், நத்தம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

... 2, 3, 4, 5 எதிர்மனுதார்கள்/
2, 3, 4, 5 பிரதிவாதிகள்

**IA 153/2025 in OS 73/2015 dt.11.07.2025**
On the file of the DM Cum JM, Natham

இம்மனுவானது, மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி அசல் வழக்கில் 4ம் பிரதிவாதியை சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய வழக்கினை Re-open செய்ய அனுமதி வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 151ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவானது 28.04.2025ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 11.07.2025 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் / 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ஜேம்ஸ் ஜான் பிரிட்டோ, அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பாலகிருஷ்ணன், அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.P.கிருஷ்ணமூர்த்தி, அவர்கள் முன்னிலையாகியும், மனு மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்டு இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்.

**உத்தரவாணை**

1. முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத்தொகை இல்லை.

2025ம் ஆண்டு ஜுலை திங்கள் 11ம் நாள் எனது கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் பதியப்பட்டது.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.07.11 00:27:52 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**நத்தம்.**

**IA 153/2025 in OS 73/2015 dt.11.07.2025**
On the file of the DM Cum JM, Natham